# தமிழ் மலையாள ஒப்பீட்டாய்வில் கால்டுவெல்லின் பங்களிப்பு

*முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்*
பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
கேரளப்பல்கலைக்கழகம், காரியவட்டம்
திருவனந்தபுரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6469

கால்டுவெல் அயர்லாந்து நாட்டில் 1814-ல் பிறந்தார். 1838-ல் சமயப் பணி ஆற்றுவதற்குச் இந்தியா வந்தார். ஜி.யு. போப், வின்சுலோ, ஜான் ஆன்டர்சன், ஹென்றி கோயர் ஆகியோருடன் நட்பு கொண்டு அவர்கள் மூலம் தமிழைக் கற்றுக் கொண்டார். 1841-ல் போதகர் பட்டம் பெற்றுத் திருநெல்வேலியில் உள்ள இடையான் குடியில் சமூகத்தொண்டும் சமயத் தொண்டும் செய்தார். 23-வது வயதில் சென்னை வந்த அவர் 53 ஆண்டுகள் தமிழ் நாட்டில் பணி புரிந்தார். திருநெல்வேலி வரலாறு (History of Tirunelveli) என்ற நூலை விரிவாக எழுதிப் பரிசும் பாராட்டும் பெற்றார்.

தமிழ் மொழியைக் கற்று புலமை பெற்றதோடு நில்லாமல் தமிழ் மொழியை ஆய்வு செய்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அறிய ஆய்வு நூலையும் தந்தவர் கால்டுவெல் . விரிவான விளக்கங்கள் ஆதாரங்கள் ஒப்பீட்டு ஆய்வு ஆகியவற்றில் இதற்கு நிகரான நூல் இன்றளவும் இல்லை என்றுதான் கூற வேண்டும். கால்டுவெல் 18 மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவர் கற்ற அறிவு இப்பெரும் நூலை எழுத அவருக்குத் துணை புரிந்தது. திராவிட தொழிகளின் இலக்கணத்தைக் கற்று அதன் இயல்புகளை விளக்கி அவற்றில் தமிழ் மொழியே சிறந்தது. தனித்தியங்கும் ஆற்றல் பெற்றது என்றும் உயர்தனிச் செம்மொழி என்றும் உறுதி செய்தார். தென்னிந்திய மொழிகளில் பரந்த அறிவுடையவர். அவரின் இலக்கிய ஆர்வமும் அவர் எழுதிய நூல்களும் அவரது சமயப் பணியைத் தடை செய்யவில்லை. சமயத் துறையில் அவர் நிறைவானப் பணியைச் செய்தார், தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் என்ற நான்கு தென்னிந்திய மொழிகளுக்கும் அடிப்படை இலக்கணம் ஒன்றே என்று தெளிவு படுத்தினார்

### மலையாளச் சொல்லாட்சி

மலையாளம் தமிழ் மொழியோடு நெருங்கிய உறவு உடைமையால் இது திராவிடமொழி வரிசையில் தமிழுக்கு அடுத்து வைக்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது. இரு மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுகளை முதன்முதலில் தொடங்கி வைத்தவர் கால்டுவெல்.

மலையாளம் என்ற பெயர் மலயாழ்மா என்று வழங்கப்பெறும். அதன் பிரிதொர் வடிவம் மலையாய்மா, இரண்டுச் சொற்களும் ஒரேப் பொருளைத் தரும். உழவன் எனப் பொருள்படும் வெள்ளாளன் என்ற தமிழ்ச் சொல் சில இடங்களில் வெள்ளாழன் எனத் திரிந்து வருவது போன்று ஆழம் என்பதும் ஆள்ம என்பதிலிருந்து திரிந்து வந்ததாகும் என்கிறார். அதில் ழகரம் ளகரமாகத் திரிவது இயல்பே. இதனால் மலையாழ்மா மலையாய்மா என மாறியது. கொச்சைத் தமிழில் இந்த “ள” அடியோடு மறைந்து விடுகிறது. உழவுத்தொழில் எனப் பொருள்படும் வெள்ளாண்மை என்ற தமிழ் சொல் மலையாளத்தில் வெள்ளாய்மா என ஆகும் என்றும் கொச்சைத் தமிழில் வெள்ளாமை என்றும் மாறுகிறது என்றார் கால்டுவெல். அதாவது நாட்டாண்மை என்ற தமிழ் சொல் நாட்டாய்மா என ஆகும் என்றால் நாட்டான்ம என வழங்கப்படும். ஆளன், ஆளி தமிழ் மலையாளத்தில் பெருவழக்காய் வழங்குகிறது. எனவே மலயாழ்ம என்பதன் அடியாகப் பிறந்த குறிப்பு வினைதான் மலையாளி என்று விளக்குகிறர்.

சமஸ்கிருத எழுத்தாளர்களால் தமிழிலிருந்து வேறுபட்டதாக மலையாளம் பிரித்து உணரப்படவில்லை. அவர்கள் வழங்கிய “திராவிட” என்ற சொல் அவ்விரு மொழிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது என்று விளக்குகிறார் கால்டுவெல்.

### கேரளநாடு, சேரநாடு

பழைய கேரள நாடு இரு பகுதிகளாகப் பிரிந்து இருந்ததாகத் தெரிகிறது அவற்றுள் கடலை ஒட்டி இருந்த பகுதி கேரளநாடு என்ற வடமொழிப் பெயரையே பெற்றிருந்தாலும் “சேர” நாடு என்று தமிழ் பெயராலும் அழைக்கப்பட்டிருந்தது.

### கிளைமொழி

மலையாளம் நான் கருதுவது போல் தமிழிலிருந்து மிகப் பழைய காலத்தில் தோன்றிய ஒரு மொழியாதலின் அது தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று எனக் கருதப்படுமே அல்லாமல் திராவிட இனத்தைச் சேர்ந்த தனித் தன்மை வாய்ந்த மொழியாகக் கருதப்படாது. தமிழுக்கும் மலையாளத்திற்கும் இடையே உண்டான பிரிவினை நனி மிகப் பழைய காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

### மலைநாடு, மலையாள நாடு

தமிழர் பாண்டிய நாட்டிற்கு மேற்குப் பகுதியில் பரந்து கிடக்கும் மலைப் பிரதேசத்தை மலைநாடு என்று அழைத்தனர். ஆரியர்கள் இந்தப் பகுதியைத் தான் கேரளம் என்று அழைத்தனர். மலைநாட்டில் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்களும் அவர்களது மொழி தமிழுமாக இருந்தது என்கிறார் கால்டுவெல். தமிழைச் செந்தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் இரண்டாக வழங்கும் பாகுபாடு இருந்தது. பலவகையான கொடுந்தமிழ்களுள் ஒன்றே மலையாளம். தமிழ் என்ற சொல்லின் வடமொழி வடிவமே திராவிடம். தமிழின் கிளை மொழியே மலையாளம். குடநாடு, குட்டநாடு, கற்கா நாடு, வேணாடு, பூழிநாடு என்ற ஐந்து பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட கொடுந்தமிழே மலையாளம். மலையாளம் கொடுந்தழிழாக மாறுவதற்கு மூன்று காரணங்களைச் சுட்டுகிறார். மலைநாட்டின் அமைப்பு, கிழக்குப் பகுதி எல்லையில் பரந்து கிடக்கும் மலை அடுக்கு மலைநாட்டை வேறுபடுத்தியது. 1. சடங்கு முறையில் வேறுபாடு 2. தமிழ் நாட்டில் இல்லாத சில வாழ்க்கை முறைகள் (மருமக்கள் தாய முறை முன்குடுமி, வேட்டி அணிதல், 3. நம்பூதிரிகளின் ஆதிக்கமும் ஆர்ய திராவிடக் கலப்பும்) இவை மூன்றும் ஆகும் என்கிறார்.

### மலையாளச் செய்யுள்

பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் வழி நான் அறிந்த அளவில் மலையாள மொழியின் மிகப் பழையச் செய்யுள் சமஸ்கிருதத்தைக் காட்டிலும் தமிழையே பெரிதும் ஒத்துள்ளது என்கிறர். தமிழ் நெடுங்கணக்கு ஏற்றுக் கொண்டுள்ள 32- எழுத்துக்களில் இடம் பெறாத எழுத்துக்கள் அனைத்தையும் அது அறவே கைவிட்டுள்ளது. தமிழ் நாட்டில் சிறப்பாகத் தென்கோடித் தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் இன்று பயன்பாட்டிலுள்ள மலையாள வரிவடிவோடு மிகப் பெரிய அளவில் வேறுபடுவது மாகிய வரிவடிவே மலையாளப் பழஞ் செய்யுற்களில் ஆளப்பட்ட வரிவடிவமாகும் என்கிறார்.

### இராமச் சரிதம்

இராமச் சரிதம் என்ற மலையாள நூல் சமஸ்கிருத எழுத்துக்களின் நுழைவிற்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை என்கிறார் கால்டுவெல். மலையளத்திற்கும் தமிழுக்கும் இடையேயுள்ள வேற்றுமைத் தொடக்கத்தில் சிறிதே எனினும் மலையாளம் இன்றுள்ள நிலையில் தமிழின் கிளை மொழிகளில் மலையாளம் உண்டு என்று கருதுதல் கூடாது என்றும் மாறாகத் தமிழில் உடன் தோன்றிய மொழிகளுள் அதுவும் ஒன்றே என்று கருதுதல் வேண்டும் என்ற நிலையில் அது வளர்ந்து பெருகி விட்டது. தொடக்கத்தில் அதைத் தமிழின் தங்கை எனக் கருதாது அதன் மகள் என்றே நானும் கருதினேன் ஆனால் மிகப் பெரும் அளவில் வேறுபடும் கிளை மொழி எனப் பொருத்தமுற பெயர் சூட்டலாம் என்கிறார் கால்டுவெல்.

### கிழக்கு, மேற்கு

தமிழிலிருந்து தோன்றியது மலையாளம் என்ற உண்மை கிழக்கு திசையை உணர்த்த அதை ஆளும் சொல்லினாலேயே விளங்கப்படும் கிழக்கு என்பது பள்ளம் நோக்கி அல்லது அடிநோக்கி என்ற பொருளுடையதாகும். இது மேல்நோக்கி அல்லது மேடுநோக்கி என்ற பொருளுடைய மேற்கு என்ற சொல்லோடு உறவுடையது என்கிறார். இது மேற்குக் கடற்கரையில் தோன்றியிருக்க இயலாது என்றும் தமிழ் நாட்டிலிருந்து மேல்நோக்கி செல்லவேண்டியிருப்பதால் மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கு கீழ் உள்ள ஒரு நாட்டில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்கிறார்.

### கேரள மக்கள் தமிழர்களே

மலையாளமும் தமிழும் பண்டு ஒரே மொழியாக இருந்தது என்றும் மலையாளிகள் தொடக்கத்தில் கேரள நாட்டிற்கு வந்து குடியேறிய தமிழர்களே ஆதல் வேண்டும் என்றும் அவர்கள் பாலக்காட்டுக் கணவாய் வழியாக மலையாள நாடு அடைந்து அங்கிருந்து வடக்கில் சந்திரகிரி ஆற்றங்கரை வரையும் தெற்கில் நெய்யாற்றங்கறை வரையிலும் பரவி வாழ்ந்தவராதல் வேண்டும் என்கிறார்.

### ஒலி- ஒப்பீடு

பல்லொலி வரிசை ஒலிகள் பொதுவாக வட மொழியில் ஒலிக்கப்படுவது போன்றே திராவிட மொழிகளில் ஒலிக்கப்படுகின்றன. ஒரேயொரு விதி விலக்கு உண்டு. ஈர் உயிர்களுடன் வரும்போது தமிழிலும் மலையாளத்திலும் ட்ட (t) என்ற வல்லொலி ட(d) என்ற மெல்லொலியிலும் குறைந்து (th) போன்று ஒலிக்கப்படுகிறது என்கிறார் கால்டுவெல். மூக்கொலியுடன் சேர்ந்து உச்சரிக்கப்படும் போது ட்ட (t) ட்(d) மெலிந்து ஒலிக்கிறது என்றும் வல்லொலி ட்ட (t) மிக மெலிந்து (th) ஒலியாக உச்சரிக்கப்படுவது தமிழிலும் தமிழின் மகளான மலையாளத்திலும் மட்டுமே காணப்படுகிறது என்றும் கால்டுவெல் கூறுகிறார்.. ழகரம் தமிழுக்குத் தனிச்சிறப்புடையது என்றும் அது மலையாளத்திலும் வழங்கப்படுகிறது என்றும் கண்டு பிடித்துக் கூறியுள்ளார்.

ஆனால் ழகரத்தின் உச்சரிப்பு தமிழகத்தில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுவதாகவும் கூர்ந்து கவனித்துக் கூறியுள்ளார்.

### படுஞாயிறு

படிஞ்ஞாயிறு என்ற சொல் திருத்தமாக வழங்கப்பெற வேண்டுமாயின் படுஞாயிறு என்றே வழங்கப்படல் வேண்டும். அச்சொல்லே மேற்கு என்ற சொல்லைக் காட்டிலும் மேலைத்திசையை உணர்த்த பயில வழங்கப்பெறுகிறது என்பது உண்மை என்கிறார். ஆனால் படிஞ்ஞாயிறு என்னும் சொல் தமிழ்சொல்லே ஆகும் என்றும் கிழக்கு மேற்கு என்ற இரு சொற்களும் தமிழ் நாட்டிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பதை டாக்டர் குண்டர்ட் ஒத்துக் கொள்வதையும் விளக்குகிறார்.

### பகர மகர மெய்கள்

மலையாளத்தில் “வ” வகரம் “ம” கரமாய் மாறும் தமிழில் “ப” கரம் வரும் இடங்களில் மலையாளத்தில் “ம” கரம் வரும் என்பது தெரிந்ததே தமிழில் உண்பான் என்பது மலையாளத்தில் உண்மான் என்பதாகும் காண்பான் என்பது “காண்மான்” என்றாகும்.

“ள” கரம் சிலபோது மலையாளத்தில் “ழ” கரமாய் மாறி பின்பு “ய” கரமாய் மாறுதலை ஆள் என்ற சொல்லிலிருந்து ஆள்மா என்பதற்குப் பதிலாக ஆழ்மா என வரும் என்று விளக்குகிறார்.

### ஓடு, ஓடு

மலையாளச் செய்யுள்களில் வரும் ஒடு (தமிழிலும் ) என்பதன் நெடில் உருவமே ஓடு என்கிறார் டாக்டர் குண்டர்ட். இக்கருத்தை கால்டுவெல்லும் ஏற்றுக்கொள்கிறார்.

### உயர்திணை விகுதி

தமிழும் மலையாளமும் உயர்திணைப் பொருள்களுக்கு ஏற்புடைய பிரிதொரு விகுதியையும் பெற்றுள்ளன இது மார் என்னும் விகுதியாகும். உயர் நடைத் தமிழில் அது மர் என வரும். இது “அர்” என்னும் விகுதியோடு ஒப்பும் உறவும் உடையது.

புருஷர், புருஷமார்,

கள்ளர் -கள்ளன்மார்

தமிழிலும் மலையாளத்திலும் உயர்திணை இருபாற் பன்மைக்குறிப்பு வினையாலனையும் பெயர்ச்சொல் விகுதியாக “வர்” என்பது பொதுவாக வரும். அது பெரும்பாலும் “அவர்” எனவே தோன்றும் இதனால் அதைப் பன்மைச் சொல்லாக்க விகுதியாக வந்த அவர் எனக்கொள்ள வேண்டும் என்கிறார்.

விண் +அவர் = விண்ணவர்

“கள்” விகுதி கள், க்கள் என்றே இரு மொழிகளிலும் வரும்.

### சோழமண்டலம்

கொரோ மண்டலம் என்ற சொல் சோழ மண்டலம் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாக இருக்கலாம் என்கிறார்.

### வேற்றுமை

தமிழிலுள்ள இரண்டாம் வேற்றுமை உருபு “ஐ” மலையாளத்தில் “எ” என்பதாகும் அது தமிழ் “ஐ” என்பதன் பிரிதொரு வடிவமே “எ” என்கிறார். தமிழில் ஐ மலையாளத்தில் எ, பழைய கன்னடத்தில் அம் புதிய கன்னடத்தில் அன்னு, அன்ன, னு தெலுங்கில் னு, னி என்பவை பழைய கன்னடத்திலுள்ள அம் என்பதன் மெல்லினம் கெடுவதால் “அ” என்றாகியது மலையாளத்தில் எ என்றும் தமிழில் “ஐ” என்றும் மாறியிருக்க வேண்டும் என்றும் கால்டுவெல் ஊகிக்கின்றார்

It indicates that both these markers were prevalent in that period at least in certain types of literary compositions. If not in spoken dialects. Cauldwel comments that during fourteen century, ai was being used as the case marker for second case in the dialect of the local Kerala people. He further adds than ai was completely replaced by “e' only a century after.

### மூன்றாம் வேற்றுமை

தமிழிலும் மலையாளத்திலும் வழங்கும் கருவி வேற்றுமை உருபு "ஆல்" செந்தமிழ் நடையில் "ஆன்" என்பது வரும். தமிழ் மலையாள உடன் நிகழ்வுப்பொருள் உருபுகள் ஒடுவும் ஓடுவும் ஆகும். "உடன்" என்பதும் வரும் வற்புறுத்துதல் பொருளில் "ஒடு" என்னும் உருபு ஒடே என்றும் வரும்.

Instrument - இலக்குவன் கத்தியால் அறுத்தான்

Sociative - சீதை பிள்ளைகளோடு காட்டுக்கு போனாள்

### சீதா குட்டிகளோடு காட்டில் போயி

ஒடு - பழைய மலையாளத்தில் உடன் என்பது இது ஒட்டுதல் என்ற வினை வடிவமே. உடன் ஒடன் என்று அமைய வேண்டும். அன் என்ற சாரியை வீணே சேர்ந்தாயிருக்க வேண்டும். தெலுங்கில் தொடு என்ற வினை பயன்படுத்தப்படுகின்றது. அது தொ எனச் சுருக்கப்பட்டுள்ளது.

### நான்காம் வேற்றுமை

இதன் உருபு தமிழில் "கு' மலையாளத்தில் "க்கு". நான்காம் வேற்றுமைக்கு இரு வகையான உருபுகளைப் பெற்றிருப்பது திராவிட மொழிகளில் மலையாளம் ஒன்றே. அவையாவன 1. க்கு மற்றொன்று "னு" அல்லது "உ". வேற்றுமை உருபுகளை இணைப்பதோடு உருபேற்கும் சொற்களோடு ஒலி நயம் குறித்த இன்சாரியையினை இணைப்பது தமிழ் மொழியின் இயல்பாகும். இவ்வழக்கம் மலையாளத்திலும் நிகழ்கிறது.

"கு" எல்லாத் திராவிட மொழிகளிலும் ஒன்று போலவே அமைகின்றது. அதன் உயிர் மட்டும் சில இடங்களில் "ஏ" எனவும் "இ" எனவும் மாறுபடுகிறது. மலையாளத்தின் னகர இறுதிச் சொற்களின் அங்கங்களின் ககரம் குன்றிப் போகும். ன்கு-ன்னு என்று மாறுபட்டு அமையும்.

Cauldwel says the fourth case is Dative case. Its marker is "ku'. This case is having meaning as offering something, In Tamil and Malayalam languages the Dative case is having this meaning.

In Keralapaniniyam the Dative case marker that is the udheesika marker is "kku' and 'u'

Eg. Kavithaikku koduththu

### ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமைத் தமிழில் "ல்" "ன்" ஆகும் மலையாளத்தில் "ஆல்"

கால்டுவெல் இதனை வாய்க்கால் முதலிய சொற்களில் காணப்படும் வழி என்ற பொருளுடைய கால் என்பதிலிருந்து தோன்றியது என்கிறார். அல் என்ற சுட்டெழுத்தின் உருவம் நீண்டும் இது அமைந்திருக்கலாம் என்கிறார். குண்டர்ட்டின் கருத்தில் இருந்து ஆதல் என்ற வினையின் ஆகல் என்ற தொழில் பெயரிலிருந்து ஆல் தோன்றியுருக்கலாம் என்கிறார்

It means moving from a place to other place that is oblation.

Eg. Muruganin moothavan Muniyan

In Keralapaniniyam the Ablative prayojika case suffix is "aal'

Eg. Baggyaththaal aagrahum saadhiccu

### ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமைக்குத் தமிழிலுள்ள பல உருபுகளில் "உடே" என்ற வடிவத்தை மட்டுமே மலையாளம் ஏற்றுக்கொண்டுள்ளது. உடய, உடெ, டெ, உடம, உடய, முதலிய வடிவங்களில் காணப்படும் சுவாமி வாசகமாகிய உட என்ற வினையின் பெயரெச்ச உருவமாகும் இது. அவனுடைய பட்ஜ்ஜனம் சகோரம் போன்றவற்றில் உள்ளது போல கவிஞர்கள் இதைத் தனியாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

Cauldweldenotes three markers Atu *(அது)* and Authu *(ஆது)* A *(அ)* as markers.

In Malayalam

the sixth case is sambanthika case marker is “ute’

Eg. Janakiyude pustakam

### ஏழாம் வேற்றுமை

இல், கல், வீட என்ற பொருளுடைய இல்லம் என்ற சொல்லே “இல்’ உருபு ஆயிற்று என்பது தெளிவு. ‘கல்’ என்ற உருபு நன்னூலில் கூறப்படும் கால் என்பதன் குறுகிய வடிவமே என்று மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் கருதுகின்றனர். தமிழிலே உள்ள “கண்” என்ற உருபின் மற்றொரு உருவமாக இருக்க வேண்டும் என்பதே பெரிதும் நிகழத்தக்கதெனத் தோன்றுகிறது. கண் என்பதற்கு இடம் எனவும் பொருளுண்டு. இப்பொருள் மலையாள வழக்கிற்கு நன்கு பொருந்தும் என்கிறார்

Eg. Malayinkan iruntha murugan

Here the meaning of the case is the place where the event is happening.

In Malayalam the aathaarika case or seventh case markers are “il’ and “kal’

Eg. Meththayil kidannu, Padikkal nilkunnu. These two have inessive and adessive meanings respectively “il” very often is used non specifically denoting general Locational meaning.

### எட்டாம் வேற்றுமை

இரு மொழிகளிலும் விளியை ஒரு தனி வேற்றுமையாகக் கருத வேண்டியதில்லை. “ஏ” என்ற இடைச்சொல்லைப் பல பெயர்களோடும் விளிப்பொருளைக் குறிக்கச் சேர்ப்பதுண்டு. உயிர் இறுதிச் சொற்களில் உயிர் நீட்டப்பட வேண்டும் என்கிறார்

Eg. Murugaa

Malayalam agrees with Tamil while defining the eighth case marker. This sambothana case has no marker. The word itself elongates and conveys the marker. Kerala paniniyam explains that the eight case is not a case. It is just a sound

Ramaa

Deviii

Modern grammarian are having the eight case is not a case. It is just a sound. But Sanskrit is considering this as a case

### உருபேற்கும் முறை

மலையாளத்தில் முன்னிலை இடப்பெயர் வடிவங்களான ஒருமைப்பெயர் தமிழில் உள்ளவாறே “நீ” உருபேற்கும் பெயரடியாகும். இலக்கியத் தமிழில் உள்ளது போல் “நின்” ய பன்மைப் பெயருக்கு “நீங்கள்” “நிங்கள்” பெயரடியாகும்.

### நிகழ்கால இடைநிலை

மலையாள நிகழ்கால இடைநிலையையும் தமிழ் நிகழ்கால இடைநிலையையும் ஒன்றே எனக்கொள்வதில் ஒரு சிறு ஐயமும் இடம் பெறாது என்கிறார் கால்டுவெல்.

### வினை முற்று

மலையாளச் செய்யுட்களில் ஒரு சில இடங்களில் தமிழில் நிகழ்வது போலவே வினைமுற்று விகுதிகள் வினை மூலங்களோடு நேரே இணைக்கப்படுதலும் உண்டு. அது போன்ற இடங்களில் அவை இரண்டிற்குமுள்ள ஒருமைப்பாடு தெளிவாக விளங்கும். (எடு) அடிக்கின்றான் என்ற தமிழ் சொல்லை அதே பொருள்படும் “அடிக்குன்னான்” என்ற மலையாளச்சொல்லோடு ஒப்பிட்டு உணர்க என்கிறார்.

### மலையாள இறந்தகாலம்

மலையாள இறந்த கால வடிவம் முற்றிலும் தமிழ் இறந்த கால வடிவமே என்கிறார். மலையாளத்தில் காணலாகும் ஒரே வேறுபாடு அம்மொழியில் வினைமுற்று விகுதிகள் இல்லாமை ஒன்றே ஆகும். தமிழில் இறந்த கால வினையெச்ச வடிவமாக வருவது மலையாளத்தில் இறந்தகால வினைமுற்றாக வரும்

சான்றாக “நடந்து” தமிழில் எச்சம். நடன்னு மலையாளத்தில் முற்றாக வரும்.

இறந்த கால வினை எச்ச வடிவமாகிய "நடன்ன" என்பதை இறந்தகால பெயரெச்ச வடிவோடு ஒப்புடையதாகக் கொண்டு "நடன்ன" என எழுதுவதால் மலையாள நடையில் ஒரு குழப்ப நிலை உண்டாகிறது என்கிறார்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் திராவிட மொழிகளின் பொதுப்பண்பு இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபடுவதைக் கால்டுவெல் விரிவாக விளக்கியுள்ளார். திராவிட மொழிகளைக் குறித்து குறிப்பாக தமிழ் மலையாள உறவைக் குறித்து கால்டுவெல் பின்வருமாறு விளக்குகிறார்.

1. தமிழ் திராவிட மொழிகளில் தொன்மை வாய்ந்த மொழி என்று குறிப்பிடுகிறார்.
2. ஐரோப்பியர்கள் திராவிடக் குடும்பத்தை தமுழியன் அதாவது தமுழுக் என்று குறிப்பிடுகின்றனர்.
3. மலையாளத்தை மலையாழ்மா, மலையாய்மா என்றும் குறிப்பிடுகின்றனர்.
4. மலையாளத்திலிருந்து எழுந்த சொல் தான் மலையாளி. தமிழின் ஒரு கிளை மொழியே மலையாளம்.
5. வினை இறுதி வடிவங்களில் பால்காட்டும் விகுதியைப் பெறாத மொழியே மலையாளம் என்று குறிப்பிடுகிறார்.
6. மலையாளம் திராவிடக் குடும்பத்தில் ஒரு தனி மொழி என்று கூறுவதை விட தமிழின் கிளை மொழி (Dialect) என்றே கால்டு வெல் குறிப்பிடுகிறார்.
7. கிரந்த எழுத்தின் வளர்ச்சி நிலையே மலையாள எழுத்து என்று குறிப்பிடுகிறார்.
8. தோற்றத்தில் தமிழின் சகோதரியாக மலையாளத்தைக் கருதாமல் மகளாகவே கருதுகிறார். ஆனால் நாளடைவில் ஏராளமான மாற்றங்கள் பெற்ற மொழியாக மலையாளம் மாறிவிட்டது. என்று குறிப்பிடுகிறார்.
9. கிழக்கு, மேற்கு என்ற சொற்களின் பயன்பாடு தமிழைப் போன்றே மலையாளத்திலும் வழங்கப்படுகிறது.
10. தமிழில் வழங்கப்படும் அவர், அவர்கள் மலையாளத்திலும் பயின்று வந்துள்ளன.
11. வாக்கியங்களை எடுத்துக் கொண்டால் தமிழ் மலையாள வாக்கியங்கள் சித்தியன் மொழியோடு தொடர்புள்ளவையாக உள்ளன.
12. ல,ள.ழ ,ய,ர,ற,ண,ன ம இந்த ஒன்பது எழுத்துக்களும் தமிழிலும் மலையாளத்திலும் ஒன்று போல் வழங்கப்படுகின்றன.
13. தமிழில் இருந்து மலையாளத்தை வேறுபடுத்திக் காட்டுபவை இரண்டு முக்கிய இலக்கணக் கூறுகளாகும் என்று குறிப்பிடுகிறார்.

1. மலையாள வினைகளில் பால் பாகுபாடு இல்லை. 2. மலையாள மொழியில் வடமொழிச்சொல்லின் மிகுந்த பயன்பாடு காணப்படுகிறது

மலையாளம் பிரிந்ததற்காண காரணங்களாக தமிழ்நாட்டில் மக்கட் பெருக்கம், எழுத்தொலித் திரிபு, சொல் திரிபு, பொருள் திரிபு, இயற்கைத் தெரிப்பு, வழக்கற்ற சொல் வழங்கல், குடியேற்றப் பாதுகாப்பு (இதுபோது தமிழில் வழங்கா விடினும் குமரிநாட்டில் வழங்கியவாகத் தெரிகின்ற சொற்களும் சொல் வடிவங்களும் பிற திரவிட மொழிகளிற் பாதுகாக்கப் பட்டிருத்தல்) புத்தாக்கச் சொல், தாயொடு (தமிழொடு) தொடர்பின்மை, வடசொற் கலப்பு, வடமொழி எழுத்தையும் இலக்கணத்தையும் மேற்கொள்ளல், தமிழின் பண்படுத்தம் ஆகியனவற்றைக் குறிப்பிடுகிறார்.

எடுத்துக்காட்டாக, தமிழில் வெள்ளையான புதுப் பெருக்கைக் குறிக்கும் வெள்ளம் எனும் சொல் மலையாளத்தில் நீரைக் குறிக்கப் பயன்படுத்துவதால் பொருள் வேறுபடுதலை அவர் காட்டலைக் கூறலாம்.

**மலையாளம்**

1. சாரல் நாட்டு (மலை நாட்டு) மன்னனாகிய சேரன் எனும் பெயர் முறையே சேரல் சேரலன் கேரலன் கேரளன் என மருவும். பின் ஈறு திரிந்து கேரளம் என்றாகும். மலை+ஆளி= மலையாளி என்றாகும். அவனது நாடும், மொழியும் சேரநாட்டுடனான தொடர்புக்கு மலை தடுப்பாக இருந்தமை.
2. 12 ஆம் நூற்றாண்டோடு பாண்டிய மரபும் 13ஆம் நூற்றாண்டோடு சோழ மரபும் சேர மரபுடன் மணவுறவு நிறுத்தியமை.
3. வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் தெய்வ உயர்வு கற்பிக்கப்பட்டமையும் வரம்பிழந்த வடசொற் கலப்பும்.
4. மிகு மழையால் மலையாளியர்க்கு மூக்கொலி சிறந்தமை.
5. மலையாளியர் முன்னோரின் செந்தமிழ் நூல்களைக் கல்லாமை.
6. மலையாளியரின் ஒலிப்புமுறைச் சோம்பல்.

மேற்கூறிய கருத்துக்களைக் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழின் ஒரு கிளை மொழியே மலையாளம். திராவிடமூல மொழியிலிருந்து தமிழைப் பிரித்துப் பார்க்க முடியாது என்பது கால்டுவெல் கருத்தாகும்

**பார்வை நூல்கள்**


1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - கால்டுவெல்
2. கேரளப்பாணினியம் (மலையாள மொழி இலக்கணம்)
3. கேரளப் பாணினியமும் கால்டுவெல்லின்றே திராவிட பாஷவியாகிரணமும் ஒரு தாரதம்மிய படணம் ( சி ஆர். பிரசாத். அச்சிடப்படாத முனைவர் பட்ட ஆய்வடு, கேரளப்பல்கலைக்கழகம்)
4. மலையாள இலக்கணக் கோட்பாடு (பேரா. கி நாச்சிமுத்து, அச்சிடப்படாத ஆய்வுக்கட்டுரை)